மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநர் செயல்முறை ஆணை
முன்னிலை. திருமதி.க.மாலதி,பி.இ.,

மதி.ஈ2/001221/2026 நாள்: 13.02.2026

பொருள் : மனை ஒப்புதல் - மதுரை மாநகராட்சி - மத்திய திட்டம் - மண்டலம் 1 – வார்டு எண்.3 - தத்தனேரி கிராமம் - சர்வே எண்கள்.5/3B, 4A, 4B1, 4B2, 4C-ல் – (6100.00 ச.மீ) பரப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்குவது - சம்பந்தமாக.

பார்வை:

1. தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை [UD4(1)] அரசாணை எண்: 181, நாள்: 09.12.2020.
2. ஆணையாளர் அவர்களின் உத்தரவு ந.க.எண்: மதி1/017412/2017, நாள்: 06.02.2021
3. உறுப்பினர் செயலர், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் செயல்முறை ஆணை ந.க.எண்: 56685/SWP/2025-5YCFJUF8/TCP dt :24.12.2025
4. இவ்வலுவலக கடித ந.க.எண்: மதி.ஈ2/001221/2026, நாள்: 04.02.2026
5. திரு.P.பிச்சை மற்றும் 4 நபர்கள் கட்டணம் செலுத்திய நாள்: 04.02.2026

****

மதுரை மாநகராட்சி, மத்தியத்திட்டம், மண்டலம் 1 – வார்டு எண்.3 - தத்தனேரி கிராமம் - சர்வே எண்கள்.5/3B, 4A, 4B1, 4B2, 4C-ல் – (6100.00 ச.மீ) பரப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி **ம.வ./ம.உ.தி.கு.எண்: 286/2025, திட்ட அனுமதி எண்: 313/2025** என எண்ணிட்டு பார்வை 3-ல் கண்டுள்ள உத்தரவில் வழங்கியதன் அடிப்படையில் பார்வை: 1 மற்றும் 2-ல் காணும் உத்தரவின் அடிப்படையில் பார்வை 4-ல் கண்டுள்ள இவ்வலுவலக உத்தரவின் படியும் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்குவதற்கு கீழ்கண்டவாறு கட்டணம் மதுரை மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

வ. எண்	பொருள்	கட்டணம் ₹	ரசீது எண்
1	குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல்	1,36,384	115/500/1/25-26/0011651 நாள்: 04.02.2026
2	பாதாள சாக்கடை குழாய் அமைத்தல்	6,98,939	
3	தெரு விளக்கு அமைத்தல்	2,17,786	
4	கூராய்வு கட்டணம் (சதுர மீட்டருக்கு) (6100.00 × 1.50)	9,150	
5	Administrative Charges (2.5%)	30,454	
6	GST 18%	1,55,891	115/500/1/25-26/0011652 நாள்: 04.02.2026
		12,48,604	
7	வைப்புத்தொகை	2,00,000	115/500/1/25-26/0011653 நாள்: 04.02.2026
	மொத்தம்	14,48,604	

எனவே, பார்வை 3-ல் கண்டுள்ள உத்தரவில் திட்ட அனுமதி **ம.வ./ம.உ.தி.கு.எண்: 286/2025** என எண்ணிட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதன் அடிப்படையில் இம்மாநகராட்சியில் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு **அனுமதி எண்: 1759/2025** என எண்ணிட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேலும் மேற்படி மனைப்பிரிவிற்கு பார்வை 3-ல் கண்டுள்ள உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

13/02/26

நகர திட்டமிடுநர்
மதுரை மாநகராட்சி

பெறுநர்:

திரு.P.பிச்சை மற்றும் 4 நபர்கள்,
கதவு எண்.4/18, தெற்கு தெரு,
கல்லம்பல், மதுரை – 625 009

13/2/26

நகல்: உறுப்பினர் செயலர், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மதுரை.